## குழந்தையின் காது இடைத்துவாரம் பாதிக்கப்பட்டிருந்தால்

உங்கள் குழந்தைக்கு காதுத்துவாரம் அடைப்பு ஏற்படுவது இயற்கைதான் எனினும், காது வழியாக நீர்த்தன்மையான படிவம் வெளியேறுவது காது கேட்கும் தன்மையைப் பாதிக்கலாம்.

**காதுகளில் ஏற்படக்கூடிய பாதிப்புகள்:**

1. காதுவலி, காதுக்குத்தல்
2. காது இழுபடுதல் மாதிரி உணர்வு
3. பேசுவதற்கும், ஒலிகளுக்கும் வேறுபட்ட வெளிப்பாடு
4. தொலைக்காட்சி, வானொலி போன்றவற்றின் ஒலியை சாதாரணத்தையும் விட அதிகமாக்குதல்
5. சாப்பிடுவது, தூக்கம் கொள்வது போன்றவற்றில் மாற்றம்
6. எரிச்சல்படும் தன்மை
7. மீண்டும் மீண்டும் ஒன்றைச்சொல்லவேண்டிய நிலைமை கூடுதல்

**உங்கள் குழந்தையின் காதுகள் ஏதாவதொரு விதத்தில் பாதிக்கப்பட்டுள்ளது என்று நீங்கள் கருதினால் குழந்தை மருத்துவரை உடனடியாக அணுகவும்**

**உங்கள் மருத்துவர், உமது குழந்தைக்கு காதுகளில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்று கூறினால், என்ன செய்வது என்பது குறித்து உதவக்கூடிய செய்திகள்:**

உங்கள் குழந்தையிடம் கட்டளைகளை பிறப்பிக்க முன்னர், குழந்தையின் கவனத்தை உங்கள் பக்கம் எடுங்கள்.

இயற்கையாக, சிறிது உரத்தப் பேசுங்கள்

அருகில் (5 அடிக்குள்) சென்று முகத்திற்கு முன் பேசுங்கள்

குழந்தையுடன் பேசும்போது மற்றைய ஒலிகளை வெகுவாகக் குறையுங்கள்.